# SUPPLEMENT TO THE BRAHMAVIDYA

# ப்ரம்மவித்தியா பத்திரிகையின்

## அநுபந்தம்

௧கம் புத்] சிதம்பரம் ஏவிளம்பிஞு ஆடிமீ ௧௯௨க்கு 1897ஞு ஜூலைமீ 29உ [இல ரு.


### வைதிகசந்திரமௌலி.

### மகாபாசுபதாஸ்திர பராவர்த்தனப்பிரயோகம்

தொடர்ச்சி

---

௨௩- காமிகாதிப்ரமுகேஷு ஸித்தாந்தாகமஸம்ஜ்ஞிதः।

௨௪- ஶ்ரூதிஸாரமயோ ந்யஸ்த ஶதகோடிப்ரவிஸ்தரः।

௨௫- ஸம்பாஶுபதம்யத்ர வ்ரதம்ஜ்ஞானம்ச கத்யதே।

௨௬- யுகாவர்த்தேஷு ஶிஷ்யேஷு யோகாசார்யஸ்வரூபிணா।

௨௭- தத்ரதத்ராவதீர்ணேந ஶிவேநைவப்ரகாஶ்யதே।

௨௮- ஸம்க்ஷிப்யாஸ்யப்ரவக்தார: சத்வார:பரமர்ஷய:।

௨௯- ருருர்ததீசோகஸ்த்யஶ்ச உபமந்யுர்மஹாயஶா:।

௩௦- தேசபாஶுபதாஜ்ஞா: ஸம்ஹிதாநாம்ப்ரவர்த்தகா:

௩௧ தத்ஸந்ததீயா குரவஶ்ஶதஶோத ஸஹஸ்ரஶ:।

௩௨ தத்ரோக்த: பரமோதர்ம: சர்யாத்யாத்மாசதுர்விதः।

௩௩ தேஷு பாஶுபதோயோகஶ்ஶிவம்ப்ரத்யக்ஷயேத்த்ருவம்।

௩௪ தஸ்மாச்ச்ரேஷ்டமநுஷ்டாநம்யோக: பாஶுபதோமத:।

௩௫ தத்ரோபாயஸ்து கோப்யுக்தோ ப்ரஹ்மணாஸதகத்யதே।

௩௬ நாமாஷ்டகமயோயோகஶ்ஶிவேந பரிகல்பித:।

17. சைவாகமங்களால் அது மீண்டும் சாங்கோபாங்கமாக விரிக்காட்டப்பட்டது.

18. ஸம்ஸ்காரத்தாலும் அதிகாரத்தாலும் நன்ருக விருத்தி செய்யப்பட்டது.

19. இந்தபரம தர்மமே ஸர்வோத்கிருஷ்டமாம் என்று சொல்லப்பட்டது.

20. சைவாகமமும் வைதிகம் அவைதிகமென்று இருவகைப்படும்.

21. ஒன்று வேதாசாரமயம் மற்றது சுதந்திரம்.

22. சுதந்திரம் முன் பத்தும் மீண்டும் பதினெட்டுமாக வுள்ளது.

23. காமிகாதி வேற்றுமைபெற்றதுசித்தாந்தம்எனசஞ்ஞையுள்ளது.

24. வேருன வேதசாரமயமோ சதகோடிகிரந்தமுள்ளது.

25- அதனிடம் உத்தமமான பாசுபதவிரதமும் பாசுபதஞானமும் சொல்லப்படும்.

26. யுகபுறட்டுகளில் கலிதோறும் யோகாசாரிய சொருபராயுள்ளது.

27. ஆங்காங்கு அவதரித்த சிலராலேயே அதுவெளியிடப்படும்.

28. அதைச்சுருக்கிப் பிரவசனம் செய்தவர் நான்கு பரமரிஷிகள்.

29. ருரு, ததீசி, அகஸ்தியர், பெரும்புகழ்பெற்ற உபமன்யு.

30. அவர்: பாசுபதர், சித்தர்,சங்கிதைகளைவெளியிட்டவர்.

31. அவர்சந்ததியில் தோன்றிய குருமார் நூராயிரக்கணக்குள்ளவர்.

32. அதனிடத்தே சரியையாதிபரமதர்மம் நான்குவிதம் சொல்லப்பட்டது.

33. அவற்றுள்பாசுபதயோகம்சிவனைப்பிரத்தியக்ஷமாக்கும் நிச்சயம்.

34. ஆகையால் சிரேஷ்டானுஷ்டானம் பாசுபதயோகமேயாம்.

35. அதையடையும்வழி, ஒன்று பிரமதேவனுல் உபதேசிக்கப்பட்டது. அதுசொல்லப்படும்.

36. (அதாவது) எண்பெயர்எனப்படும் யோகம் சிவனுலே கற்பிக்கப்பட்டது” என்பது.

இங்ஙனமிருக்கும் இம்முறைபுறட்டி 7=10=11=3=4=5=13=14=15=16=17=18=31= இந்தவிடத்துக்கே ஸம்பந்தப்படாதது ஒன்று) “32=33=29=30=31=’ என்றமைத்து, வாயுதேவனுக்கும் மகரிஷிகளுக்கும் சம்வாதம் நடக்கும் இடையில் சிவபிரான் தேவியைநோக்கி விளி

த்துரைத்த 14ம் அர்த்தத்தைச் சேர்த்து தமக்குவேண்டியபடி கூட்டியும் 19=20=21=22=23=24=25=26=27=28=வரை குறைத்தும். ஒருமுடிவுரை கூறி அதனடி கிடைத்த சித்தாந்தவலிகொண்டு மேலேநடத்தும் விவாதம் எட்டுணையும் நிலைபெருதாக. மேலும், இவர்சொன்னவழியைப்பற்றிச் சிறிது விசாரிப்பாம். சிவபுராணம் சொல்வதாகஎடுத்து, பரமம் அபரமம் என்ற இருவகைத் தருமங்களில் "பரமம், பதிதருமம், அபரமம், பசுதர்மம் என்பதாம்" என்று சொல்லுகிருர். இது சிவபுராணத்துள்ளதல்ல' அதுமட்டோ? "அச்சிவதர்மமும் கன்மயாகம், தபோயாகம், ஜபயாகம், தியானயாகம், ஞானயாகம், எனஐவகை" என்று மூலத்தில்காணுத ஒரு ஆகமத்தை இவ்வைந்திலும் சேர்த்தார். இதுவும் சிவபுராணத்திலில்லாததே. அப்பதம் எதற்குச்சேர்த்தாரோ, அல்லது எச்சிவபுராணத்துட்கண்டாரோ அறியோம். நிற்க. அவையும் ஒன்றுக்கொன்று உயரவுடையனவாம் என்ருர். இதுவும் அங்குள்ளதல்ல. இவர்வருவித்ததே. அபரதருமமானது பரதர்மத்துக்குச் சாதனமாம் என்ருர். இதனுல் கன்மானுஷ்டானம் பரதர்மசாதனமே என்று நன்கு புலப்பட அதற்கு விரோதமாகச் சிலசத்திநிபாதமில்லாதார்க்கு இப்பரமதர்மசித்தியில்லை என்கும் தமது வாதத்தை எங்ஙனம் நிலைநாட்ட நினைத்தாரோ யறியோம். தருமசாஸ்திரங்களினுலே அவ்வபரதருமம் உபபிருங்கணம் செய்யப்பட்டதெனில், அவ்விஷயத்தில் அது ஆகமங்களைச்சிறிதும் ஒவ்வியதல்லவென்ருயிற்று, மற்றுப்பரதர்மத்திலும் உண்மையறிவு வேதத்தாற்ருன் கிடைக்கும் என்று யாம் எடுத்துக்காட்டிய வாயுசங்கிதாவசனங்களில் சைவத வசனம் ஸ்பஷ்டமாகச்சொல்வதை இவர்மற்றதாலும் கஸ்தூரியைக்கையிலடக்க எத்தனித்த கதையை ஒத்ததாயிற்று. மேல்பரமதர்மஇதிஹாஸம் புராணங்களாலே தெளிவின்றியுபபிருங்கணம் செய்யப்பட்டது என்ருர். "கூயு௦ஹிக" என்றசொல்லுக்குச் சிரமப்பட்டு என்பது பொருளாமே யன்றி மற்று தெளிவன்றி என்பதுபொருளாகாது. மேலும் வியாஸஸ்மிருதிமுதலிய ஸ்மிருதிகளாலும் அனேகபுராணங்களாலும் வேதார்த்தத்துணிவுக்கேது இதிஹாஸபுராணங்களே எனக்காட்ட, இங்கு அவை அவ்வளவு உபயோகமில்லை. தெளிவற்றது. என்ற பொருள்கொடல் ஸர்வம் பிரமாணவிருத்தம்.இதேபுராணத்துவக்கத்திலும் மற்றும் அனேக ஸ்மிருதிகளிலும்,

உதிஹாஸபுராணாஹ்யாம் வெடாநுஸ ௯வஹ்ரு
ஹயெக॥

இதிஹாசத்தாலும் புராணத்தாலும் வேதங்களைப் போருட்படுத்துக என்றும்

விஹெதூ ஶ்ரூதாக வெவெடாரொயம் ஷுதவெ
ஷிதி | ஐஷிஹிநிஷ்ஸ்ரிதெதவெஷ காஸங்காஸ்யா நூ
ஹாதநாம் - உதிஹாஸபுராணாஸ்யாம்வெடாநூ
௯வஹ்ருஹயெக -

சிறிது கற்றவனைக்கண்டு வேதங்கள் 'அந்தோ இவன் எம்மை அபார்த்தம் கூறிக் கெடுப்பான்' என்று நடுங்கும் ரிஷிகள் துணிந்தபொருளில் ஆன்ருேநக்குச் சமய மிராது. ஆகவே இதிஹாஸபுராணங்களால் வேதத்தைப் பொருள்படுத்துக' என்றும் அநந்தகோடிப் பிரமாணங்களை ஆசிரியர் புராணரக்ஷையின் உரை வஜ்ராங்கரக்ஷையில் எடுத்துவிரித்தார். அதை அங்கேகாண்க எவர்பார்த்தும் கேட்டும் உள்ள எந்த புராணங்களிலும் எந்த ஸ்மிருதிகளிலும் ஆகமங்களை வேதோபப்பிரம்மணமாகச் சொல்லவேயில்லை, வியாஸஸ்மிருதிமுதலியவிடத்தில் புராணங்களைத்துவக்கும் முறையும் அதைத்தானஞ்செய்யுமுறையும் அவற்றைப்பாராயணம் செய்யும்முறையும் ஆரம்பம் சாம்யமாய்ச்சிறுபான்மைஉலகத்துள்ளதை நீர்கேட்டதில்லைபோலும்! இப்படி ஆகம அடனவிதிமுதலியவெல்லாம் ஆகமத்திலே தானே பாவம் பார்த்தறியவேண்டும்! இதுவும் நிற்க. இவர்கொண்டபடி ஆகமங்கள் வேதோபப்பிருங்கணமானுலும் அவை வேதத்தில் உள்ளவைகளைத்தான் உபபிரும்மணம் செய்து வேதோபப் பிரம்மணப்பட்டம் பெறுமோ அல்லது வேறுவழியும் உண்டோ! அங்ஙனமாகவே தங்களில் உள்ளவற்றையே அவைகள் அனுவதிக்கின் அவ்வேதமுடிகளும் காணுத நிலையை இவரது ஆகமம் சொல்லும் என்ற இவர் வார்த்தை எவ்வளவுமணம் பெறும்? 'தனக்குச் சந்தேகம் தம்பிக்குச் சம்பளமாம்' என்றவாறு வேதபுருடன் தம்மையண்டியவருக்குக் கொடுக்காத சில ரகஸியங்களைத்தமது அந்தரங்கத்துள்ளவர்க்குக் கொடுப்பார்போல், பாருங்கள் அம்மட்டோ டடங்காது வேதங்களைக் குறைவுபடக் கூறியும் இவர்கொண்டதை நிறைவுபடக் கூறினர்; என்றதன்பிரயோஜனம் யாதெனின், 9-வசனத்தில் ஏதோ வேதத்தில் குறைவேதோன்றுவதாக நினைத்து அதிலும் மேலாக ஆகமத்தைக்காட்டினர் சூரியமண்டலத்துடன் ஓர் வட்டகாகிதத்தைப் படம்கட்டி ஆகாயமேற்றி சூரியனுக்கப்பால் செலுத்தியவனை அதன் நிழலில் மறைக்கநினைப்பதுபோலவே இது வென்க. தொடக்கத்தில் தர்மப்பிரமாணம் வேதமே என்றபிறகு, அதே அத்யாயத்தில் விபரீதார்த்தம் ஒருசொல்லுக்குச் செய்த தன்வலியாலே அம்பலமேறுவது பெருந்தவறல்லவாபாருங்கள்! ஆதியில் இருவகைத்தருமங்களும் வேதத்துள்ளனவென்றும் இடையே தருமத்தில் பிரமாணம் வேதமே யாமென அவற்றைவிட்டு இவ்வேத வேதாந்தங்களுள் அகப்படாத தத்துவத்தைச் சொல்வது.ஆகமம் என்பது ஷட்கவ்யமாகும். உபப்பிருங்கணம் என்ருல், ஓர்வகை உரை இங்கு மூலமான வேதம் யோகபரியந்தமும், இது ஞானபரியந்தமும் ஆனமையால், இது உபபிருங்கணமும் அது மூலமும் ஆவது எஞ்ஞான்றும் கூடாது. மேலும் பரமதருமம் ஐவகை என்று எடுத்தவிடம் கிரியை, தவம், ஜபம், தியானம், ஞானம் என்றுஐந்து குறிக்கப்பட்டதேயன்றி யோகம் என்பது குறிக்கப்படவேயில்லை ஆகையால் யோகம் என்பது பொதுச்சொல்லும் கிரியையாதிகள் விசேஷபதமுமாகவே கொள்ளவேண்டும் அங்ஙனமாயின் இவர்கொண்ட கன்மயாகமாதி ஐந்து கன்மயோகமாதி ஐந்தாய் ஒருகொம்பு முளைக்கப்பெறும். அ

துவே நியாயம், கன்மயோகம், தபோயோகம், ஜபயோகம் (மந்திரயோகம் தியானயோகம், ஞானயோகம் என்று அநேகபிரமாணப் பிரபந்தங்களில் சொல்லப்பட்டனவையாதலால் பொருள்பொருந்தும். அப்படியாக யோகபரியந்தச் சொல்லுக்கு ஐவகைதருமபரதருமம் வேதாந்தத்தில் யோகரூபமாகச் சொல்லப்படும். ஆகமங்களல்ல நால்வகைவிரிக்கும். கன்மகாண்டம் மூவகை என எடுக்குமுறையின் விரித்து தாரதம்யமும் சித்திக்கும். இங்ஙனமானால் வேதாந்தத்துள்ள கன்மம், தவம், ஜபம், தியானம், ஞானம் ஐவகைக் கன்மதவஜபத்தியானங்களையே ஆகமங்கள் விரிப்பனவும், கன்மம் தபம், ஜபம் இவைகளை விரிப்பது கன்மகாண்டமுமாம். ஆதலாற்றான் 10-ம் வசனத்தில் 'மூவகையான அபரதர்மம்சுருதிமுகத்தில் அதுபோலவே உள்ளது' என்றுளது. அதுபோலவே என்றால்! வேதாந்தத்துள்ள ஐவகையில் ஒன்று ஆகமத்தில் குறைந்ததுபோலவே மீண்டும் ஒன்று குறைந்து மூவகைத்தருமம் கன்மகாண்டத்தில் என்றதாயிற்று. மேலும் உபக்கிரமத்தில் வேதங்களில்உள்ளஇருவகைத்தருமங்களை இங்கு விரிக்கப்பாலனவென துணிந்தமையால் அதற்கு விரோதமாக உபசங்காரத்தைப் பொருட்படுத்துவது வாக்யார்த்த சம்பிரதாயமறியார் சழக்குரையாம் ஆதலால் இவர் இங்கு ஆகமங்களுக்குச்சம்பாதித்தச் சிறப்புச்சிதைந்தது. நிற்க இம்மட்டோடிராது மேலே இவ்விதச்சிறப்பும் வைதிகசிவாகமங்களுக்கே யுரியது என்று 19-ம் வசனம் முதல் 27 வரை ஸ்பஷ்டமாகச் சொல்வதால் அதை விட்டொழித் தொளித்து அதற்குரைத்த சிறப்பை அதேவசனம்புறக்கணித்தொதுக்கிய காமிகாதிகளில் சேர்க்கமுன்வந்தது இவரது சித்தாந்த நிறைவை நன்கு காட்டியது 'சிவாகமங்களிலே யுள்ள சரியை, கிரியை, யோகம், ஞானம், எனநான்கும் பரதர்மமாம் என்றார். இது தவறு 32-ம் வசனத்தில் அதனிடத்தே என்று 24-ம் வசனத்தில் அவைதிகாகமத்தினும்வேறாக எடுக்கப்பட்டமையால் அவ்வசனம் குறித்தசிறப்பு வைதிகாகமத்துக்கே. அவற்றுள் பாசுபதயோகம் சிவத்தை உறுதியாகப் பிரத்தியக்ஷமாக்கும் என்றதும் அதனடியே வந்த 33ம்வசனமாகவே அதுவும் சிரௌதாகமவிஷயமே அப்பாசுபதயோகமும் இவர்குறித்தபடி ஹௌத்திரி தீக்ஷாதிக ளல்ல; மற்ற நாமாஷ்டக யோகாதிகள் என 35, 36- வசனங்களால் அறிந்துய்க. ஆதலால் இச்சிறப்பை இவர் அவைதிகாகமத்தின்தலையில் ஏற்றினும் அது அவ்வளவு தாங்க ஆற்றல் பெற்றிலது ஆகவே, 'அந்தபாசுபதயோகமே முக்கியமாக வனுஷ்டிக்கப் பாலதாம்' என்று 34-ம் வசனார்த்தமாக இவர் எடுத்துரைத்த பெருமையும் எமது வைதிகாகமத்தையே சார்ந்ததாயிற்று. இவ்விதம் எடுத்ததெல்லாம் பகுத்திட இவர்தமக்குதவி தேடி உயர்ந்த மகரிஷிகளைச் சேர்த்துக்கொண்ட விந்தையைக் காட்டி விசாரிப்பாம். 'ருரு, ததீசி அகஸ்தியர் உபமன்யுவாம் உயர்ந்தோர் வைதிக பாசுபதர்களாம் என்றார் இதனால் அவைதிகம் என்றும் அதேபிரகரணத்தில் ஒதுக்கப்பட்ட காமிகாதிசிவாகமங்களைக்கொண்டு தீக்ஷைபெற்றஇவருக்குலாபம் யாது? ஸ்பஷ்டமாக அந்நால்வரும் 28, 29, 30, வசனங்களால் வைதிகசிவாகம சங்கிதைகளுக் காசிரியர் என்றுசொல்லப்படுதலாலும் மேலே கிருஷ்ணனுக்கு உபமன்யுபகவான் வேதசாரசிவாகம சங்கிதைகளை வெளியிடுவோர் நால்வர் தாம் உள்பட நால்வரென்றமையாலும், சுத்தவைதிகரேயாம்இந்தவுண்மையைப்பின்னர்விளக்குவாம். இங்ஙனமாக அவைதிக சிவாகமங்களைவேறுபடுத்தி வைதிகசிவாகமங்களைச் சிறப்பித்தபிரகரணத்தையேஇவர்இவ்வசனங்களைக்கூட்டியும் சிலவற்றைப் புரட்டியும், சிலவற்றை விட்டும், பொருட்படுத்துவரேல் புராண மிப்பாடுபட்டால் வேதம் இவரிடம் எப்பாடுபடும்? வேதாந்தங்களின் கதிதான் என்னவாகும். அந்தோ அறுவகை யங்கங்களும், ஏழுவகை அறிகுறிகளும், ஆயிரம் மீமாஞ்சாதி காரணங்களும் இருக்க, அவற்றை எதையும் நோக்காது மனம்போனபடி இறகு சென்றவழி எழுதிவைப்பவருக்கு எவ்வித நிற்பந்தமில்லாததும் ஊருக்கொருவிதமாயுள்ள காமிகாதி தந்திரங்கள் அகப்பட்டால் அவைபடும்பாட்டைப் பரமசிவனே யறியவேண்டும். ஒன்றுமுதல் முப்பத்தாறுவரை எடுத்த 18 சுலோகங்களின் கருத்துக்கியைய அங்குசொல்லப்பட்ட சிரேஷ்டானுஷ்டானம் ஈதெனக்காட்டி அவற்றுள் வைதிகபரமாசாரியரான ஸ்ரீ ருரு, ததீசி முதலியோர் கௌரவத்தையும் வேதநிஷ்டையும் அவைதிகப்பழிப்புந்தெற்றென யாவரும் அறியும்படி காட்டுவோம். சிரேஷ்டானுஷ்டானம்கன்மங்களில்பாகமேயாம்என வேதம் வகுக்கின்றது. யஜுர்வேதம்துவக்கத்திற்றானே (ஶ்ரேஷ்ட²தமாய கர்மணே) சிரேஷ்டதமமானகன்மத்திற்காக' என்றது அனுஷ்டானம், என்பதும் கன்மம் என்பதும் ஒக்கும். அதற்குப் பிராம்மண்யமும் யஜ்ஞோ ஹி ஶ்ரேஷ்ட²தமங் கர்ம என்றது மேலும் இவரும் பிரமாணமாக வெடுத்ததைத்தரீயமகோபநிடதம் ஸ்பஷ்டமாக இறுதியில் யஞ்ஞத்தைப் பரமசாதனமாகப்புகழ்ந்தது யஜ்ஞ இதி யஜ்ஞேன ஹி தே³வா தி³வங்க³தா: யாகம் என்பது என்று எடுத்தது ஆகையால் யஞ்ஞம் சிரேஷ்டமெனப்பட்டது' என்று வசனமிருப்பதை அதன் 79ம் அநுவாகத்தில் காண்பாராக ஆதலாற்றான் அறுகுலத்து ரிஷிகளுக்கு ப்ரம்மதேவன் தீர்க்க சத்திரத்தால் சிவாராதனத்தையுபதேசித்தான் ஸ்ரீமத் அகஸ்தியர் சீடராய ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியும் ஸ்ரீமத் உத்தரகாண்டத்தில் சொன்னபடி பரமசிவ ப்ரீதிகரமாக அசுவமேதத்தையே செய்தார். அங்ஙனம் உபமன்யு பகவான் சீடரான ஸ்ரீகண்ணனும் யஜுஷ்ட்வா ஹம் ஜாயாம் திவ்யம் ஹவ்யனாதனம் யஞ்ஞத்தில் மிகுந்த அமிர்தபானம் செய்தவர் ஸாக்ஷாத்யாகஸனாதனப்பிரமத்தையடைந்தார் என்றார் மேலும் இங்கு சிரேஷ்டானுஷ்டானம் இது எனக்குறித்தற்கு முன்னரே அக்னிஷோமீயாத்தியாயத்தில் ஸ்ரீபரமேசுவரன் அக்னிரூபனாகவே வைதிகர்க்கு பாஸிக்கப்படவேண்டியவன் என்று நிரூபிக்கப்பட்டது. பின்னும் இவ்வித சிரேஷ்டானுஷ்டானத்தைக்கண்டு சுருக்கி யுபதேசித்த ஸ்ரீததீசிமகரிஷி சாக்ஷாத் ஆதர்

வணர் என்றும், அவர் தனது சிரத்தின்வழி தேஜோரூபமாய்சிவனருளால் வேதம் வெளிவரக்கண்டு அதனை யுலகத்தாருய்யுமாறுபதேசித்தார். ஆகையால் அவர்கண்ட வேதசாகைக்கு 'அதர்வசிரஸு' என்றபெயர் அமைந்தது என்பது ரிக்வேதம் 4 ம் அஷ்டகத்தும் எஜுர்வேதம்3 ம் காண்டம் 5ம் பிரச்னத்தும் ஷை வேதம் 4ம்காண்டம் ஒன்றும் பிரச்னத்தும் ஸ்பஷ்டமாக,

𑌤𑍍𑌵𑌾𑌮𑌗𑍍𑌨𑍇 𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑌾𑌦𑌧𑍍𑌯𑌥𑌰𑍍𑌵𑌾 𑌨𑌿𑌰𑌮𑌨𑍍𑌥𑌤 ।
𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑍋 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯 𑌵𑌾𑌘𑌤𑌃 ॥
𑌤𑌮𑍁 𑌤𑍍𑌵𑌾 𑌦𑌧𑍍𑌯𑌙𑍍𑌙𑍃𑌷𑌿𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰 𑌈𑌧𑍇 𑌅𑌥𑌰𑍍𑌵𑌣𑌃 ।
𑌵𑍃𑌤𑍍𑌰𑌹𑌣𑌂 𑌪𑍁𑌰𑌨𑍍𑌦𑌰𑌂 ॥

ஓஅக்னி! உன்னைச் சிரசிலுள்ள சர்வாதாரத் தாமரையினின்று அதர்வாகடைந்தெடுத்தார்; உன்னையே அவ்வதர்வ புத்திரர் ததீசிபிரகாசம் செய்வித்தார், விருத்திரஹனனம்செய்ததாய்ப் புரந்தானும் நீ, என்று நிரூபித்தும் மந்திரங்களால் ஸ்பஷ்டமாயிற்று மேலும் அதர்வசிரஸின் இறுதியில்:—

𑌉𑌦𑍍𑌯𑌦𑍍𑌭𑌿𑌰𑌥𑌰𑍍𑌵𑌣𑌸𑍍𑌯 𑌶𑍀𑌰𑍍𑌷𑌾𑌦𑌯𑌮𑌵𑌾𑌹𑍃𑌦𑌯𑌂 ।
𑌮𑌸𑍍𑌤𑌿𑌷𑍍𑌕𑌾𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌰𑌯 𑌨𑌵𑌤𑍋 𑌨𑌾𑌯𑌮𑍁𑌚𑍍𑌛𑍀𑌰𑍍𑌷𑍍𑌣𑌃 ॥
𑌤𑌦𑍍𑌵𑌾 𑌅𑌥𑌰𑍍𑌵𑌣𑌃 𑌶𑌿𑌰𑍋 𑌦𑍇𑌵𑌕𑍋𑌶𑌃 𑌸𑌮𑍁𑌬𑍍𑌜𑌿𑌤𑌃 ॥

இன்று அதர்வணவேதம் இவர்சிரசைப்பிளந்துகொண்டுஇதயம்முதல் மூளைவரைமேனோக்கி வாயுதேவன் பிரேரிக்கஅதர்வன் சிரசினின்று வெளிப்பட்டது. ஆகையால் அது அதர்வசிரமாம் தேவகோசமாம் என்று சொல்லப்பட்டது. ஆகையாற்றான் ஸ்ரீவித்தியாரண்ய முனிவர் இந்த ததீசிமகரிஷிபூஜித்த அக்னி எனப்படும் தேவனுக்குக் கொடுக்கப்பட்டவிசேஷணங்களாகிய விருத்ரஹா, புரந்தரன் என்பனவற்றிற்குப் பாவநாசகன், திரிபுரம் எரித்தவன் என்றும் பொருளிட்டார். இதையே ப்ரம்மபுராணம் 110 ம் அத்தியாயம்முழுதும் புகழ்ந்தது அங்கு ஸ்ரீததீசி ஆதர்வணரே என்றும் இவர்புத்திரரே ஸ்ரீபைப்பலாதா என்றும் அவரே ஆமிர்தப்பிராசனம் செய்ததத்துவஞ்ஞ சிகாமணி என்றும் நிரூபித்துளது. அதுகொண்டே அதர்வசிகையில் அதர்வாவைப்பைப்பலாதர் முதலியோர் வினவினர் என்று எடுத்தது ப்ரம்மபுராணத்தில் சிவனுடன் சாரூப்யம் பெற்று கணகோஷ்டியிலிருந்து மேதினி சேர்ந்து தனது புத்திரனுக்கு தத்துவ உபதேசம் செய்யும்பொழுது.

𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌸𑌾𑌰𑍂𑌪𑍍𑌯𑌂 𑌶𑌿𑌵𑍇𑌨𑌾𑌥 𑌗𑌣𑌮𑌣𑍍𑌡𑌲𑌸𑍇𑌵
𑌯𑌾 । 𑌭𑍁𑌵𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌸𑍁𑌤𑌾𑌯𑌾𑌦𑌾𑌤𑍍 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾
𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌤𑌸𑍍𑌤𑌤𑍋𑌽𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌂 ॥

விவாகம் செய்துகொண்டு பரசிவபக்தியைச்செய்வாய். *ங்கையாடி சத்சந்ததியைப்பெற்று விதிவழுவாது தக்ஷிணைகளோடு கூடின யாகங்களைச் செய்து கிருதகிருத்யனாய் சாசுவதமோக்ஷத்தைப் பெறுவாய்' என்று வேதப்பிரசித்தமான முக்கடன் தீர்க்கவுபதேசித்தாரெனப்பட்டது அதுகொண்டே ஸ்ரீதசரதரும் 'அதர்வசிரஸில் விதித்தவழியில் யாகஞ்செய்தா'ரென்று ராமாயணம் சொல்லியது. அதனாற்றான் போதாயன கௌதமாதி மகரிஷிகள் தமது தர்மசூத்திரங்களில் ஸ்பஷ்டமாய் அதர்வசிரஸைப் புகழ்ந்தனர். எல்லா வேதங்களைப் படிப்பதிலும் அதர்வசிரஸின் பாடம் மேலானதென்றுஅது புகழப்பட்டது. நரசிம்மதாப்னீயவுபநிடதமும் பிருகஜ்ஜாபாலவுபநிடதமும் அதர்வசிரஸைப் புகழ்ந்தன. இத்தகைய சுத்த வைதிக பாசுபதவிருதத்தையுபதேசிக்கும் அதர்வசிரசிலுள்ள பாசுபதவிருதத்தையே நிரூபித்தும் மேற்கண்ட பெருமையுள்ள ஸ்ரீததீசியால் சுருக்கப்பட்டதுமானது அவைதிககாமிகாதிகளென்பது எட்டுணையும் பொருந்தாதறிக. மேலும் வாயுசங்கிதையிறுதியில் ஸ்ரீகாசியில் அனேக வைதிக பாசுபத சித்தர்கள் பரசிவதிவ்யஜோதியில் இலயமடைந்தார் என்று வர்ணித்து அதைக்கண்ட மகரிஷிகள் பிரமதேவனிடம் அதனுண்மையை வினவ அக்கடவுள் கருணைகூர்ந்து.

𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌤𑌿 𑌹𑌿 𑌯𑍁𑌷𑍍𑌮𑌾𑌕𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌰𑌾𑌮𑍁𑌷𑍍𑌮𑌿𑌕𑍀 𑌪𑌰𑌾 ।
𑌭𑌵𑌦𑍍𑌭𑌿𑌃 𑌦𑍀𑌰𑍍𑌘𑌸𑌤𑍍𑌰𑍇𑌣 𑌚𑌿𑌰𑌮𑌾𑌰𑌾𑌧𑌿𑌤𑌃 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 ॥
𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑍋 𑌦𑍇𑌵 𑌇𑌤𑌿 𑌭𑍂𑌤𑌾𑌰𑍍𑌥𑌸𑍂𑌚𑌿𑌤𑌂
𑌵𑌾𑌰𑌾𑌣𑌸𑍍𑌯𑌾𑌂 𑌤𑍁 𑌯𑍁𑌷𑍍𑌮𑌾𑌭𑌿𑌰𑍍𑌯𑌦𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑌂 𑌦𑌿𑌵𑌿 𑌦𑍀𑌪𑍍𑌤𑌿 𑌚 ॥
𑌤𑌲𑍍𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌂 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌤𑍇𑌜𑍋 𑌮𑌾𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌪𑌰𑌂 ।
𑌤𑌤𑍍𑌰 𑌲𑍀𑌨𑌾𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇𑌽𑌨𑌯𑌃 𑌶𑍍𑌰𑍌𑌤𑌪𑌾𑌶𑍁𑌪𑌤𑌵𑍍𑌰𑌤𑌾𑌃
𑌤𑍇 𑌮𑍁𑌕𑍍𑌤𑌾 𑌭𑌵𑌸𑌾𑌯𑍁𑌜𑍍𑌯𑌂 𑌨𑍈𑌷𑍍𑌠𑌿𑌕𑌾𑌶𑍍𑌚𑌾𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌾𑌃 ।
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌾𑌨𑍇𑌨 𑌪𑌥𑌾 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌾𑌮𑌿𑌤𑌿 ॥
𑌸𑌨𑍍𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌂 𑌹𑌿 𑌯𑍁𑌷𑍍𑌮𑌾𑌕𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍇𑌨 𑌤𑍇𑌜𑌸𑌾 ॥

உங்களுக்கீசன் பிரசாதம் செய்கிறான். ஆமுஷ்மிகசித்தியும் கைகூடியது. உங்களால் தீர்கசத்திரத்தால் நீண்டகாலம் பிரபு ஆராதிக்கப்பட்டான். அவன் பிரசாதாபிமுகனானன் என்று பூதார்த்தம் இதனால் சூசிக்கப்பட்டது. காசியில் உங்களால் காணப்பட்ட ஆகாயமளாவிய திவ்யதேஜஸுலிங்கரூபியான பரசிவமயமே. அதில் ஒடுங்கின மகரிஷிகள் வைதிகபாசுபதர். அவர் எல்லோரும் முக்திபெற்றார். அவர் நைஷ்டிகர் நிஷ்பாபர்கள். இதே வழியில்தானே நீங்கள் முக்தியடையவேண்டியதென்பது நீங்கள் கண்ட தேஜஸால் காட்டப்பட்டதென்று நிரூபித்தார். இதனால் எவர் நிஷ்காமமாய் எக்ஞாதி வைதிககர்மங்களால் பரமேசுவரனை வழிபடுவார். அவர்களுக்கு சிவஜோதியிற்கலக்கும் அத்துவித வாழ்வே யுறுதியென்று குறிக்கப்பட்டமையின் வைதிகபா

சுபதர்கு யக்ஞாதி சிரேஷ்டானுஷ்டானத்துடன் கூடிய வக்னிஹோத்திர விரஜாதி பஸ்மதாரணமே மகாபாசுபதம்மென வேர்ப்பட்டது. இவ்வளவால் இவ் வாதியார் எடுத்துக்காட்டியவசனங்கள் யாவும் இவருக்குச்சாதகமின்றி பாதகமாக முடிந்ததறிக. மேலும் இவ்வித முக்தியே உங்களுக்குஎன்று பிரம்மன் உபதேசித் தருளியமையாற்றான் வைதிகதீக்ஷையில் ருத்ரரூபனான அக்னியும் தீக்ஷிதனும் ஏகனும் என்று விதி கூறப்பட்டது. யஜுர் வேதத்தில் I ம் காண்டத்தில் 2 ம் பிரசினம் 11 ம் அனுவாகத்தில்

கூஹெரு தவதெகூவ வ தா நாம வ்ரு தவதிர ஷி யாஃ ஃதநெஷா ஷாகூவியாதவ தந ஏியம ஷாயி -ஃ ஷஹ நெளவ்ரு தவதெவ்ருதி நொவடி தாநி ,,

ஓஎல்லாம் விரதங்களுக்கும் விரதபதியாய அக்னீ (ருத்திர நீயெல்லாவிரதங்கட்கும் அதிபதி யன்றோ? எது எனது சரீரம் அது உன்னிடம் இருக்கவேண்டும். எது உனது திருமேனி அது என்னிடம் இருக்கவேணும். விருதங்கொண்ட எம்மிருவருக்கும் விருதங்கள் கலந்திருக்கவேண்டும். என்று வசனம் அங்குள்ளது இங்குசொல்லப்படும் அக்னி ஒருசமயம் கேவலாக்கினியோ என்ற சம்சயம் நிவர்த்திக்கவேண்டி

யாதெகூஹெருஷியா தநூ: தயா நஃ வா ஹி,,

ஓஅக்னி உனது ருத்ரரூபம் யாதுளது அதனால் என்னை ரக்ஷிக்கவேண்டும் என்று மீண்டும் மந்திரம் எழுந்தது இம்மந்திரத்தில் ருத்திரன் அக்னி தேவனுக்கடங்கினவனோ என்ற துர்வாராசங்கை நிகழாவண்ணம்ஸ்பஷ்டமாய் யஜுர்வேதம் ஆறும்காண்டம்.

யாதெகூஹெருஷியா தநூஸிதூாஹ ஷயெவெ நஹெவதயாவ்ருதயதி ||

யாதே 'அக்னி என்பான் சுவயதேவதையால் விரதம் பெறுவானுக' என்று விரித்துக் காட்டியது. இதனாற்றான் ஈசன்மூர்த்தி எட்டாவது. தீக்ஷிதன் என்பது அன்றி, இந்த மந்திரவிநியோகத்துடன் கூடிய அவர்ந்திர தீக்ஷைக்குடனே செய்யும் உபஸத்து என்ற யாகம் ஸ்ரீ பசுபதி ப்ரீதிக்காகவென்று திரிபுர சங்கார சரித்திரத்துடன் வேதங்கள் நிரூபித்தன. இச்சரித்திரம் யஜுர்வேதசங்கிதையிலும் ஐதரேய ப்ராம்மணத்திலும் உண்டு. ஆதலாற்றான் அவர் (ரூஹெயஃ) 'ஆக்னேயர்' எனவேதங்களில் வழங்கப்படுவார். அதுகொண்டே சுத்தவைதிக சிவாத்துவித சித்தாந்தப் பிரவர்த்தகாசாரியருள் ஒருவரான ஸ்ரீமத் கௌணியர் பிரான் அனேகவைதிக பாசுபதர்களான ஸ்ரீநீலநக்னருத்ர பசுபதியாதிகளுடன்பரசிவமகாஜோதியிலேயே திருப்பெருமணத்திற் கலந்தார். என ஆப்தர் கூற்று. அதுகொண்டே அம்மகாசாரியர் எங்கும் சிட்டர்களை வர்ணிக்கும் பொழுதெல்லாம் சுத்தவைதிகாக்கினி ஹோத்திரத்தையும் பசுபந்தாதிகளையும் அவரியலாகக்கொண்டு வர்ணித்து அனேகமாய் உத்தமக்ஷேத்திரங்கட்கு அவர் வாசம் பெரும்சிறப்பெனப் பாடிக்காட்டினார். அங்கு எங்கும் யாகம் என்பது தற்காலத்து வைதிகாகமிகர்கள் கொண்ட சிவயாகமல்ல மற்றுவேதோக்தமாயும் மூன்று அக்னிகளால் முடிக்கக்கூடியது மான அக்னி ஹோத்திரம் அக்னிஷ்டோமமாதியே என எவருமறியுமாறு அம்மகாபுருஷர் திருவாக்கில் சிறிது எடுத்துக்காட்டுவோம்.

கோயிற்றிருப்பதிகத்தில்

கற்றாங்கெரியோம்பி கலியைவாராமே
சிட்டர் வாழ்தில்லை—பரப்பைபடுத்தெங்கும்

பசுவேட்டெரியோம்பும் சிட்டர் '........' என்றும்
செந்தியார் வேள்வியொவாததில்லைச்சிற்றம்பலத்தே

திருவேட்களத்திருப்பதிகம்.

வேதமும் வேள்வியுமோவா வேட்கள நன்னகரே

திருவெண்காட்டுப்பதிகம்.

வேள்விப்புகையால் வாளமிருள்கூர் வெண்காடே

திருப்புகலியூர்ப்பதிகம்.

வேள்விப்புகை போர்ப்பதுசெய்தமணிமாடமோங்கும்புகலிநகர்.

ஷையூர் பதிகம்

திண்ணமூன்று வேள்வியாளர்சிரபுரமேயவனே.

வேள்வியற்றலைவனுமாய்நின்றார்.

எண்ணிடையொன்றினரிரண்டினருருவமெரியிடமூன்றினர் நான்மறையாளர்.

விருதிநான்மறையுமங்கமோராறும்வேள்வியும்வேட்டவர் ஞானங்கருத்தினுருலகிற்கருத்துடையார்சேர்.

திருவேழுகூற்றிருக்கையில்.

இருபிறப்போர்ந்து முப்பொழுதுகுறைமுடித்து, நான்மறையோதி யையவகைவேள்விபமைத் தாறங்கமுதலெழுத்தோதி, வரன்முறைபயின் றெழுவான்றனைவளர்க்கும் பிரமபுரம்.

திருவோமாம்புலியூர் திருப்பதிகம்.

அம்பரமாகியழலுமிழ்புகையினுகுதியான்மழைபொழியும் உம்பர்களேத்துமோமாம்புலியூர் ஆங்கெரிமூன்றுமமர்ந்துடனிருந்தவங் கையாலாகுதிவேட்கும் ஓங்கியமறையோரோமாம்புலியூரென்றும்,

மணந்திகழ்திசைகளெட்டுமேழிசையுமவியுமாறங்கமைவேள் வி யிணைந்தநால்வேதமூன்றெரியிரண்டுபிறப்பெனவொருமை யாலுணருங், குணங்களுமவற்றின்கொள்பொருள்குற்றமற்ற வையுள்ள●மெல்லா, முணர்ந்தவர்வாழுமோமாம்புலியூர்.

கள்ளிருள்யாம நான்மறைதெரிந்து நலந்திகழ்மூன்றெரியோ ம்பு, மொள்ளியார்வாழுமோமாம்புலியூர்.

திருநல்லூர் பதிகம்.

நாலுமறையங்கமுதலாறுமெரிமூன்றுதழலோம்புஞ்சீலமுடை யார்கணெமோடவளருந்திருநலூரே.

திருநள்ளாறு.

வேதியர்கள் வேள்வியொழியாதுமறைநாளுமோதியவர் நாம முணர்த்திநெள்ளாறே.

திருப்பாம்புரம்.

மிக்கநல்வேதவேள்வியுளெங்கும் விண்ணவர்விரைமலர்தூவ விதியதுவழுவாவேதியர்வேள்விசெய்தவரோத்தொலியோவா ப்பதியுது.

திருவீழிமிழலை

மறைமுத்தியானவன் சிவன்.

மண்ணிற்பெருவேள்விவளர்தீப்புகைநாளும்
விண்ணிற்புயல்காட்டும்வீழிம்மிழிலையே.
படித்தார்மறைவேள்விப்பயின்றூர்பாவத்தை
விடுத்தார்மிகவாழும்வீழிம்மிழிலையே.
தக்கார்மறைவேள்வித்தலையாயுலகுக்கு
மிக்காரவர்வாழும்வீழிம்மிழலையே. [கொண்டு
புந்தியினுன்மறைவழியே புற்பரப்பி நெய்சமிதைகையிற்
வெந்தழலின்வேட்டெலுின் மிகவளிப்போர்சேருமூர்மிழி
லையாமே

கேடிலாவேள்விசெயர்தணர்வேதியர்வீழிமிழிலையார்
மாதவர்களன்னமறையாளர்கள்வளர்த்தமலிவேள்வியதனுல்
மந்திரநன்மாமறையினெவளர்வேள்விமிசைமிக்கப் புகை
போய்.

திருவாலவாய்.

வேட்டுவேள்விசெய்யாவமண்கையரை
வேதவேள்வியைநிந்தனைசெய்துழல்
வைதிகத்தின்வழியொழுகாதவர்
மறைவழக்கமிலாதமாபாவிகள்

வேட்டுவேள்விசெய்யும்பொருளை விளிமூட்டுசெந்தைமுருட் டமண்குண்டரை அழலதோம்புமருமறையோர்திறம், வழலதெ ன்னுமருகர்,

இங்ஙனமாகப் பலவுளவேனும் விரிவஞ்சியவற்றைவிடு த்தாம்- நிற்க. இங்ஙனம் வைதிகபாசுபததீக்ஷையஞ்ஞாதி களேயென்பது நாட்டப்பட்டது. பசுபதியைத் தேவதை யாகப்பெற்றதே பாசுபததீக்ஷையாம். பாசுபதமென்ற சொல் லில் 'ஸாஸ்யதேவதா' 'அஃதற்குத் தேவதை' என்று பா ணினிசூத்திரத்தில் பசுபதிச்சொல்மேனின்ற 'அண்' என்ற தத்திதவிகுதிக்குத் தேவதையே பொருளாதலாலென்க. அக் னிஷ்டோமாதி யாகங்கள் எல்லாம் பசுபதிதேவதையேகொ ண்டனவென்றும், அவனன்றி வேறு எவரும் அதற்கு அதி தேவதையாகாரென்றும், ஸ்ரீஹரதத்த மூர்த்திகளும் ஒரு வாறு நன்கு துலக்கியிருக்க, அதைவிட்டு சர்வவிபரீதமா னவசனங்களை எல்லாம் புறட்டி வேண்டியதைமட்டில் எடு த்து விரோதமானவற்றை அகற்றிப் புதுமதங்கட்டினுல் எவ் விதம் அது சிட்டரவைக்கண் நிலை பெறும்? மேலும் அவைதிக பாசுபத தீக்ஷைசெய்துக் கொண்ட ங்கு வைதிககன்மங்களைப் பல பல வொழித்திட நேருமாக வே அவ்வைதிகம் வைதிகருக்குக் கூடாதென்று வேதாக மப்பிராமாண்யத்தில் ஸ்ரீமத் ப்ரம்மஸ்ரீ ஸ்ரீநிவாசசாஸ்திரி களவர்கள் நிரூபித்திருக்கிறுர்கள். அங்கேயதைக் காண்பீராக ஆகவேவைதிகபாசுபதத்தைப் புகழ்ந்த மேற்கண்டவசனங்கள் உமக்கேதும் சகாயமாகாதெனத் தெற்றெனப்புலப்படுத்தி னும். 'தியானபரியந்தமே வேதசிரசு பேசிமுடிப்பதாம் என வும்' என்று வேதத்தில் கண்டவற்றிலும் மேலானநிலை அவை திக சிவாகமத்துள்ளதென மனப்பாற்குடித்தார் அந்தோ! வேதத்தைக்கெடுத்ததும் கூடவாகா, வேதபாஷ்யமான அவை திகாகமங்களெல்லாம் வேதங்களிலும் மேலாம் என நாட் டவந்தது. மிகவும் வியக்கத்தக்கதே நிற்க. இவ்வித பரம வேத விருத்தசித்தாந்தமே சிவாத்துவிதமாம். இதற்குப்பாஷி யம் ஸ்ரீநீலகண்ட சிவாசாரிய ரியற்றியதேயாம். இதுவுமோர் புதுமையாம் யாம் முன்னர் இவர்கொண்டபடி ஸ்ரீகண்ட பாஷ்யம் இவர் சித்தாந்தத்துக்கு முற்றிலும் விரோதமெ ன்றும் அவர் ஆகமசப்தத்துக்குக் கொண்டபொருள் வைதி கசிவாகமங்களே என்றும் முன்னிரூபித்தோம் ஆயினும் இவ் விடத்து சிறிது எடுத்துக்காட்டுவோம். முதலில்ப்ரம்ம ஜிஞ் ஞாதிகரணம் முதல் ஆகமவாதிகளின் விரோதத்தை ஸ்ப ஷ்டமாகக் காட்டுவோம்.

க-ம் அதிகரணத்தில்

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

'தர்மமும் ப்ரமம்மமும் ஆராதனமும் ஆராத்யமும் ஆத லால் அவற்றை முறையேகூறிக்கும் இருநூல்களும் இனி யதனுல் தருமமறியற்பாலது' என்றுதொடங்கி 'மீளான்

த்தத்தால் மிளான்சத்தத்தால்' என்றவரை ஒரேசாஸ்திர மாம என்றார். எதனுல் ஜைமினி மகரிஷி எழுதியதருமமீமாஞ்சையிற் சொல்லிய யஞ்ஞாதிகளே ப்ரம்மவிசாராதிகாரரூபம் என்றுர்:மேலும் அவையே ப்ரம்மாராதனம் எனவும் குறித்தார் அதுமட்டோடொழியாது சிவாத்துவித வித்யாதிகாரம் உபநயனுதி ஸம்ஸ்காரங்களாற்றுன் உண்டென்று அதேயதிகாணத்தில் வற்புறுத்தப்படுகின்றது.

(க) தர்மஸ்ய ப்ரஹ்மப்ராப்திஹேதுத்வே தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி| யஜ்ஞேந தாநேந தபஸாநாசகேந | இதி ஸமஸ்த ஶ்ருதிரேவ ப்ரமாணம் ||

(ஆ) கர்பாதாநாதிஸகலகர்மணாம் பாபக்ஷயஸம்ஸ்காரஹேதுதாம் ப்ரகாசயதி ||

(இ) யதா வ்ரீஹிப்ரோக்ஷணம் தர்சபூர்ணமாஸாபூர்வோத்பத்திஹேதுஸ்ததா ஸ்வர்கஸாத்யே ததா கர்மாணி ஜ்ஞாநப்ரயோஜகம் ததா மோக்ஷஸாத்யஜ்ஞே ||

(ஈ) ததாஸத்யநதீதவேதாந்தாநாம் விசாராபாவாத் புருஷார்த்தாஸம்பவ: ||

[உ] ஶ்ருத்யாதிஸம்வாதிதஸகலாங்கஸம்விதஸ்ய ஸ்வாநுகுணஸ்ம்ருதீதிஹாஸபுராணாபியுக்தஸூக்திஸந்தர்போபப்ரும்ஹணஸ்ய —நிகிலபுருஷார்த்தாகரஸ்ய பரமப்ரயோஜநஸ்ய பகவதோ தர்மஸ்ய

(அ) தர்மம் பிரமஞ்ஞானஹேதுவென்பதில் 'அவ்விவன்றன்னையந்தணரறிய விரும்புவார் வேதபாடத்தானே' 'யஞ்ஞத்தானே தானத்தானே' 'தவங்களாலுபவாஸத்தானே' என்று பகவதிசுருதியே பிரமாணம்.

(ஆ) கற்பாதானுதி எல்லாக்கன்மங்களும் பாவமலங்களைத்துலைக்கும் கருவியெனச் சொல்லப்படுகிறது.

(இ) எங்ஙனம் நெல்லைப் புரோக்ஷித்தல் தர்சபூர்ணமாசாபூர்வவேதுவான சுவர்க்கவேதுவாம்' அங்ஙனம் ஞானவேதுவான கன்மங்களும் மோக்ஷவேதுவாம்.

(ஈ) அங்ஙனமாயின் வேதாந்தாத்யயனம் செய்யாதவர்க்கு விசாரமின்மையால் புருஷார்த்தம் கூடாது.

(உ) சுருதிகளால் பொருளறிக்குறிப்பீடுகளால் பூர்ணமாக அங்கங்களைப் பெற்றதும் தனக்கியைந்த ஸ்மிருதீதிகாஸபுராண அபியுக்த சூக்திகளால் உபப்ரம்மணம் செய்யப்பட்டதும்———எல்லாப் புருஷார்த்த இனங்களுக்கும் உரைவிடமானதும் பரமஞானஹேதுவுமான தர்மபகவான்,

என்றும் வரைந்தமையால் இதில் (அ) வசனம் யஞ்ஞாதிகள் பிரமஞானஹேதுவென்றது வேதசித்தமென்றதால் அவைதிகாகமிகர்கொண்ட தீக்ஷாதிகள் அவர் தொடவில்லையென்பதாயிற்று. (ஆ) வாக்யத்தில் கற்பாதானுதிசம்ஸ்காரங்களே மலம் போக்குமென்று காட்டினமையாலும் தந்திர தீக்ஷை தள்ளப்பட்டது. (இ) வாக்கியத்தில்—ஞானமாத்திரமே மோக்ஷந்தருவதல்ல. மற்று கன்மமுமென்று யாகாதி வர்ணுச்சிரமங்களுக்குரிய தர்மம் செய்யாதவன் மோக்ஷம்பெறுனென்று நாட்டப்பட்டது. (ஈ) வாக்கியத்தில் வேதாந்த விசாரமில்வழி மோக்ஷங்கூடாதெனப்பட்டது.(உ) வாக்கியத்தில் ஸ்மிருதி, இதிகாஸம், புராணங்கள்' அபியுக்தசூக்திகள் இவைகளே வேதோபபிருங்கணங்கள் அவைதருமப் பிர்ம்மங்களையே சொல்வனவன்றி தீக்ஷையாதிகளை யல்ல வென்றும் குறிக்கப்பட்டது. இவை எல்லாம் சிந்தாந்திகட்கு முற்றும் விரோதம். மேலும் முதலதிகரணத்திலே மங்களாசரணத்தில் நமஶ்ஶ்வேதாஶ்வதராய நாநாகமவிதாயிநே;' சுவேதாசாரியரை நமஸ்கரிப்போம். நானுகமங்களைச் செய்தருளிய' என்று எடுத்து ஸ்ரீசிவபுராணம் வாயுசங்கிதை சொன்னபடி வைதிக பாசுபதாகமப்பிரவசனகர்த்தரான சுவேதாசிரியரைத்துதித்து அதேபுராணம் அதே ஆகமத்தின்சாரம் எனக்குறித்து 'சிவாதி நாமாஷ்டகத்தையே மேலதிகரணத்தில் சிவன் குறியாக்கினமையாலும், பாசுபத்தியாதிகரணத்தில்' என்ற ஆகமவசனத்தாலும் ஈசனுபாதனமுமாம் என்று வைதிகசிவாகம சாரவசனத்தை எடுத்தமையாலும், வைதிக சிவாகமாசாரிய சிவாம்சாவதார சுவேதாசாரிய சீடராதலாலும், வைதிக சிவாகமங்களாலும் ஸ்மிருதி முதலிய பிரமாணங்களாலும் போற்றப்படும் வேதவழி செல்வோரான சிவஞானச் செல்வராய சிவ சொரூப சிவாத்துவிதிகளுக்கு உபாசனார்த்தமான பூர்வபாஷ்ய மிதேயன் இப்போலிப் புதிய சிவாத்துவிதிகளுக் கருளியதல்ல.

மேலும் நேற்றுவரை இவரினத்தார் எவரும் இவரைச் சைவர் என்றும் உட்சமயமாரென்ற பகுதியில் சிவாத்துவிதிகள் ஓர்வகையாம் என்றும் சொல்லிவர, இவர் மெள்ள வைதிகருடைசேர்த்து சைவராய் அவவுடையொழித்து அச்சைவமும் விலக்கி மெதுவாய் வைதிகரான சிவாத்துவிதிகளுள் சேரப்பார்க்கிறுர். சிவாத்துவிதிகள் விழிக்காதுழிஅம் மதத்துக்கோர் ஆசிரியத்வத்தையும் இவர்வசப்படுத்திக்கொள்வார். 'அங்ஙனம் முடியாதொழிந்தது ஈசன்திருவருளே அந்தோ! இவர்சித்தாந்தம் சிலகாலம் சித்தாந்தசைவம்என அவர் நூல்களிலேயே வழங்கப்பெற்றது மீண்டும் சுத்தாத்துவிதம் எனச்சிலவிடம் வழங்கப்பட்டது. மற்று கோபா

சபாபதிநாவலர் தாம் சிலசைவரிடம் நாவலர் பட்டம்பெற்றுஅதற்குகைம்மாருக சைவருக்கு வைதிகர் என்றதோர் பட்டம் கொடுத்தார். இன்று இவர் அந்தோ!புதியதாய் இவர்முன்கொண்ட ஆசிரியர் ஞானப்பிரகாசராதியோர் தன்மதமன்றென விலக்கிய வைதிக மதப்பெயரைச் சுமந்து பண்டிதர் சிவஞானராதியோர் தம்மதமல்லவென்றும் சுருபசிவசமவாதசைவம் என்றும் ஒதுக்கின ஸ்ரீகண்ட பாஷ்பத்தையும் தன்வயப் படுத்தப்பார்த்து பத்திரிகைகளில் எழுதிவருகிறார். முன் ஸ்ரீகண்டபாஷ்யத்தில் உரிமைகொண்டாடின சைவர்பலர் அப்பாஷ்யவசனங்கள் சில பரம்மவித்தையில்வெளிப்படவே அவ்வழி விட்டொழிந்தனர் இவர் அவர்களைப்போலல்லாது தமது நாவலிமையை மிகவும் விரித்தமையால் இவரை உத்தேசித்தே வெளியிடுவதில் குறிப்பால் இனி இப்போலிச் சித்தாந்திகள் இந்த ஸ்ரீகண்டபாஷ்யத்திடம் சேராவண்ணம் அடியில் அனேகவிஷயங்கள் இவருக்குவிரோதமென்று காட்டிவருவாம்:—

(1) இரண்டாம் அதிகரணத்தில் ஈஶாநாதியாநாமபி காரணம்ஶிவதத்வம் ॥ என்று அஷ்ட நாமங்கள் சிவன் குறியாகக்குறித்தார் அது அவைதிகாகமவிருத்தம் மற்றுவைதிகாகமத்துள்ளதே?

(2) தத்ர தாத்ருஶஹித்நிஜமஹாஹயகாரணத்வஸம்பவாத் அவ்விதப்பெருமைபெற்று அப்பொருளின் கண் உலகுக்கு பாதானமும் நிமித்தமும் ஆதல் பொருந்துமாகையால் என்றது உமது மதத்திற்கு ஒவ்வாது.

(3) மூன்றும் அதிகரணத்தில் ஜகத்காரணம்ப்ரஹ்ம வேதாந்தைகஸமதிகம்யம் ஜகத்காரணமான ப்ரம்மம் வேதாந்தசாஸ்திரத்திலேயே அறியப்பாலது என்றுரே அது உமக்கெங்கனம் பொருந்தும்? வேதங்கள் ஆகமங்களிலும் கீழ் என்றும் அவ்வைதிகாகமங்களிலே சிவஞானம்பேசப்படும். என்றீரே, இதுவே உமது பாஷ்யம்.

(4) அதே அதிகரணத்தில் விலக்ஷணைககர்த்ருகத்வ ஸிஜாவவி நிமித்தோபாதாநஶக்தியுக்தைககர்த்ருகத்வஸித்திர்நாஸ்தி ॥ உலக்விலக்ஷணமாய் ஒருகர்த்தாசித்திப்பானுயினும் நிமித்தமும் உபாதானமுமான ஒரேகர்த்தா அனுமானத்தால் சித்தித்தல் கூடாதென்றுர், இதுதானுமக்குதவுமா?

(5) அதே அதிகரணத்தில் ஸ நோ தேவஶ்ஶுபயா ஸ்ம்ருத்யா ஸம்யுநக்து ॥அந்ததேவன் எமக்குச் சுபமானவறிவைக் கொடுக்க'' என்ற மந்திரார்த்தம் உரைக்குமிடம் வேதாந்தஸார ஸாமரஸ்யவிஷயா ஸ்ம்ருத்யா ॥ வேதாந்த ஸார சாமரகசியம் நிறைந்த புத்தியுடன்' என்றுரைத்தனர் இது முன்னர் சுவேதா சுவதரத்தையும் தைத்திரீயத்தையும் நீர் பொருட்படுத்திய விடம் கூறியபொருளுக்கு முற்றிலும் விரோதம். நீர் ஸ்மிருதி என்றதற்கு சிவசக்தி என்றும் அது தந்திர சித்தமென்றும் பொருளுரைத்தீரே, எங்ஙன மது இங் கொவ்வும்?

(6) நான்காமதிகரணத்தில் ஶ்ரவணம் நாம வாக்யாநாம் வேதிகாநாம் பராத்பரே – உபக்ரமாதிபிர் லிங்கைஸ்தாத்பர்யநிர்ணய: ॥ கேட்டல் என்று வேதவாக்கியங்களுக்குப் பரத்தினும் பரனான பரமசிவத்திடம் உபக்கிரமாதி தாத்பரிய லிங்கங்களால் பொருட்டுணிபெய்தல் என்று நிரூபித்தார். இங்கு சிவதத்துவஞ்ஞானம் வேதத்தாலன்றி மற்றில்லை என்றுர். அதுவுமக்கொவ்வுமா.

(7) அதே அதிகரணத்தில் ஶ்ரோதவ்ய: ஶ்ருதிவாக்யேப்ய: 'வேதவாக்கியங்களாலேயே கேட்கப்பாலன' என்றதுதான் உமக்குக்கூடுமோ?

(8) அவ்வதிகரணத்தில் ஸுக்ருதாநிஷ்காம யஜ்ஞாதி வேத: நிஷித்தகாம்யரஹித: – யதாஶ்ருதி ஸ்ம்ருதி விஹித கர்மாநுஷ்டாந ஸம்பந்நசித்தஶுத்தி: ஶமாத்யநுக்ருஹீத பரஶிவ பக்திஸாதிக ஜ்ஞாநார்த்தீ முமுக்ஷு: ஶ்ருதி ஸாரைஶ்ஶிவாபிதேயம் ப்ரஹ்மவிதித்வா தத்பாவமேதி ॥ ஆதலால் 'நிஷ்காம தர்மாசரணம் செய்து நிஷித்தகாம்யகர்மங்களைத் துலைத்து வேதங்களும் தர்மசாஸ்திரங்களும் விதித்த கன்மானுஷ்டானத்தால் சித்தசுத்தி பெற்று சமாதிகளடைந்து பரம சிவபக்தி நிறைந்த புண்ணிய முமுக்ஷு, வேதசாரங்களால் சிவனெனப்படும். ப்ரம்மத்தையறிந்து வழிபடுவோன்' என்றுர். இங்கு வைதிக ஸ்மார்த்தகன்மங்களே மோக்ஷ ஹேதுவாம். ஞானகாரணமென்றனரே, உமக்கு அது உபயோகமாகுமா? சாக்தீசாம்பவீ, மாந்திரீ முதலி தீக்ஷைகளாலேயே மலபரிபாகப்படும் என்பதன்றோ உமதுவாதம் உமக்குப் பாஷ்யம் உதவுமா?

(9) அடுத்த ஐந்தாமதிகரணத்தில்:— நாமரூபவிஹீநஸூக்ஷ்மசிதசித்விஶிஷ்டஸ்ய பரஸ்ய ப்ரஹ்மண: காரணத்வம் – நாமரூபவிபாகார்ஹஸ்தூல சிதசித்விஶிஷ்டஸ்ய கார்யத்வமிதி ஸித்தாந்த: ॥ நாமரூப பாகுபாடு செய்தற்கரிய சூக்கும சித்து அசித்துக்கள் சேர்ந்தபரமேசுவரன் காரணம் நாமரூப பாகுபாடு செய்தற்குரிய ஸ்தூல சித்து அசித்துக்கள் சேர்ந்த பரமேசுவரன் காரியம் எனச்சொல்லும் எமக்கு, என்று சுவமதம் விசிஷ்டம் ப்ரம்மவாதம் போற்காட்டினரே, அதுதானுமக் குதவுமா? இதுவே தானு உமது பாஷ்யம்.

இன்னும்வரும்.